


சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் தலைமையில் மாநகர செயலாளர், துணை மேயர் நா.குணசேகரன் முன்னிலையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார் உட்பட கூட்டணிக் கட்சியினர் கலந்து கொண்டனர்.



கழக தலைவர், முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க தென்காசி தெற்கு மாவட்டம் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பில் LPG சிலிண்டர் எரிவாயு தட்டுப்பாட்டிற்கு காரணமான ஒன்றிய பா.ஜ.க அரசைக் கண்டித்து தென்காசி தெற்கு மாவட்டம், தென்காசி,கடையநல்லூர் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட ஒன்றிய,நகர,பேரூர் கழகம் வாரியாக 25 இடங்களில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.இதில் சுரண்டை நகர தி.மு.க சார்பில் நடைபெற்றது. இதில் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் பங்கேற்று கண்டன உரையாற்றினார் ஆர்ப்பாட்டத்தில் தென்காசி பாராளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ராணிஸ்ரீ குமார் ,தென்காசி சட்டமன்ற உறுப்பினர் பழனி நாடார் மற்றும் கூட்டணிக் கட்சி மாவட்ட செயலாளர் கள்,தொண்டர்கள்,கழக நிர்வாகிகள் உள்பட பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.



தேனி தெற்கு மாவட்டம் ஆண்டிபட்டியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் தமிழ்நாட்டுக்கு திட்டங்கள் இல்லை அடுப்பு எரிக்க கேஸ் சிலிண்டர் இல்லை என கூறி கண்டன ஆர்ப்பாட்டம் ஆண்டிப்பட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன் தலைமையில் நடைபெற்றது. கிழக்கு ஒன்றிய செயலாளர் ராஜாராம், பேரூர் செயலாளர் சரவணன் மற்றும் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி சார்பாக மாநில செயலாளர், அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அறிவுறுத்தலின்படி, மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. ஆலோசனையின் படி சமையல் எரிவாயு பிரச்சினையில் உரிய நடவடிக்கை எடுக்காத ஒன்றிய அரசைக் கண்டித்து மதுரை செல்லூர் 50அடி ரோட்டில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்திற்கு மாநகர் மாவட்ட அமைப்பாளர் பாலகிருஷ்ணன் தலைமை வகித்தார். தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணை செயலாளர் பாச பிரபு ஆர்ப்பாட்டத்தை துவக்கி வைத்தார். மேலும் இதில் பகுதிச் செயலாளர்கள் ராதாகிருஷ்ணன், குரும்பன், வட்டச் செயலாளர்கள் கருப்புராஜ், பவர் மணிகண்டன், தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் ஜெயப்பிரகாஷ், கருணாநிதி, சௌந்தர்யா, பவித்ரா, திவ்யா, பிரபாகரன், அன்புராஜ், முத்தையா, ரவிசங்கர், முனியாண்டி, பாண்டியராஜன், முகிலன் உள்ளிட்ட திரளானோர் பங்கேற்றனர்.




தலைமைக் கழக அறிவிப்பிற்கு இணங்க தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் என்.டி.ஏ. அரசையும், அதன் அடிமைக் கூட்டணியையும் கண்டித்து மதச் சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் திருப்பூர் தெற்கு மாவட்டம், உடுமலை ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு மாவட்டக் கழக பொறுப்பாளர், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே. ஈஸ்வரசாமி தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சி நிர்வாகிகள், மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்டக் கழக, கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், அனைத்து சார்பு அணி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



நெல்லை கிழக்கு மாவட்டம் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பில் ஒன்றிய பா.ஜ.க – NDA கூட்டணியின் தவறான வெளிநாட்டு கொள்கைகளால் ஏற்பட்டுள்ள சமையல் எரிவாயு (LPG) விலை உயர்வு மற்றும் எரிவாயு சிலிண்டர் பற்றாக்குறையால் பொதுமக்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கும் நடவடிக்கைகளை கண்டித்து நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க. பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் தலைமையில்,நெல்லை கிழக்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் வி.பி.துரை முன்னிலையில் களக்காடு மணிக்கூண்டு அருகில் ஒன்றிய NDA அரசை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் நெல்லை நாடாளுமன்ற உறுப்பினர் ராபர்ட் புரூஸ் பங்கேற்று ஒன்றிய NDA அரசைக் கண்டித்து கண்டன உரையாற்றினார்.நிகழ்வில் நகர செயலாளர் மணி சூரியன், ஒன்றிய செயலாளர்கள் ராஜன், செல்வ கருணாநிதி,நகர்மன்ற தலைவர் சாந்தி சுபாஷ், பேரூர் செயலாளர்கள் அயூப்கான், கசமுத்து,முன்னாள் காங்கிரஸ் மாவட்ட தலைவர் மோகன் குமாரராஜா, தமிழ்செல்வன், சிபிஐ ஒன்றிய செயலாளர் லெனின் முருகானந்தம்,சிபிஎம் ஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரன்,தேமுதிக ஒன்றிய செயலாளர் சக்திவேல், எஸ்டிபிஐ மாவட்ட செயலாளர் மீராஷா, எஸ்டிபிஐ நகர தலைவர் பக்கீர் மைதீன்,தே.மு.தி.க. நகர செயலாளர் பழனி,மாவட்ட வழக்கறிஞர் அணி பாலசுந்தர், மாவட்ட விவசாய அணி மாடசாமி மற்றும் கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் உட்பட பொது மக்கள் பலர் கலந்து கொண்டனர்.




கேஸ் சிலிண்டர் தட்டுப்பாடு இன்றி வழங்கக் கோரி NDA அரசைக் கண்டித்து விருதுநகரில் தி.மு.க. கூட்டணி கட்சிகள் சார்பாக சட்டமன்ற தொகுதி திமுக சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர். சீனிவாசன் தலைமையில் நகர செயலாளர் எஸ்.ஆர்.எஸ் தனபாலன், நகர் மன்ற தலைவர் எஸ்.ஆர்.எஸ்.ஆர். மாதவன் முன்னிலையில் நடைபெற்றது. சிபிஎம் பாலசுப்பிரமணியன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சக்திவேல், மக்கள் நீதி மையம் காளிதாஸ் திக் நல்லதம்பி, புகழேந்தி, தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி கே.ஜி. ராஜகுரு, இளைஞர் அணி ஆர். கிருஷ்ணகுமார், பொதுக்குழு உறுப்பினர்கள் ஆர் பி மதியழகன், எஸ். சுதாகர் போக்குவரத்து கழக தொ.மு.ச. ராஜ செல்வம், தொ.மு.ச.மாவட்ட செயலாளர் மாடசாமி, அகழகாணி பாரத் விவசாய அணி மேசன் ராமர், நகர திமுக துணை செயலாளர் ஏ எஸ் கே ரமேஷ் குமார், ஓட்டுனர் அணி திருமாறன், நகர அவைத் தலைவர் காசிராஜன், மகளீர் அணி வகிதா ரகுமான், பாண்டிசெல்வி மற்றும் அனைத்து கட்சி நிர்வாகிகள் பொதுமக்கள் பெரும் திரளாக கலந்து கொண்டனர்.




சிவகங்கை மாவட்டம் தேவகோட்டையில் தமிழக முதல்வர், கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவின் பேரில் ஒன்றிய அரசைக் கண்டித்து நகர் கழக செயலாளர் பெரி.பாலா தலைமையில் மாவட்ட துணை செயலாளர் திருமதி ஜோன்ஸ் ரூசோ, ஒன்றிய செயலாளர்கள் நாகனிரவி,வே.பூபாலசிங்கம், லெ.மு.ரவிச்சந்திரன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் மதச் சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியினர் கலந்து கொண்டார்கள்.



சிவகங்கை மாவட்டம் சாக்கோட்டை ஒன்றியம் புதுவயலில் ஒன்றிய கழக செயலாளர்கள் சுப.சின்னத்துரை, கே.ஆர்.ஆனந்த் தலைமையில் உறுப்பினர் பள்ளத்தூர் கே.எஸ்.ரவி, மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு தலைவர் கொத்தமங்கலம் சேது ,பேரூர் கழக செயலாளர் பகுருதீன் அலி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர் .




நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல்வஹாப் எம். எல்.ஏ ஆலோசனைப்படி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பில் தாழையூத்து பஜாரில் நாரணம்மாள்புரம்,சங்கர் நகர் பேரூர்கள் ஏற்பாட்டில் தமிழ்நாட்டுக்கு திட்டங்களும் இல்லை அடுப்பு எரிக்க கியாஸ் சிலிண்டரும் இல்லை. ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து தலைமைச் செயற்குழு உறுப்பினர் பேச்சிபாண்டியன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. நிகழ்வில் துணை மேயர் கே.ஆர்.ராஜ், சங்கர் நகர் பேரூராட்சி செயலாளர் செல்வ பாபு, நாரணம்மாள்புரம் பேரூராட்சி செயலாளர் பேச்சு குட்டி, முன்னாள் பேரூராட்சி செயலாளர் துரை சுடலைமுத்து உள்பட கழக நிர்வாகிகள் மற்றும் கூட்டணிக் கட்சியினர் பலர் கலந்து கொண்டனர்.